www.tamilarangam.net

# மேதினம்

மேதினம் என்பதே தொழிலாளர்களின் தினம் என்ற கருத்து மறைந்து வருகின்ற இந்த காலகட்டத்தில் மேதினத்தின் உண்மையான அர்த்தத்தையும், அதன் பாரம்பரியத்தையும் தெரியவைப்பதே இன்று நம்முன்னுள்ள கடமையாகிறது.

1886 ஆம் ஆண்டு! அமெரிக்காவிலுள்ள சிக்காகோ நகரின் வீதிகள் தொழிலாளர் இரத்தத்தால் சிவந்திருந்த காலம்! அமெரிக்கத் தொழிலாளர்கள் தங்கள் வேலை நேரத்தை எட்டு மணித்தியாலங்கள் ஆக்கும்படியும், மற்றும் பிற கோரிக்கைகளுக்காகவும் போராடி சாதனை படைத்ததினம். மேதினம் உருவாக நேரடியான காரணமாயிருந்த போராட்டங்கள் 1884ல் அமெரிக்காவில் எட்டுமணி நேர இயக்கத்தின் போதே துவக்கப்பட்டது. இருப்பினும், அதற்கு முந்திய தசாப்தங்களிலேயே அமெரிக்க தொழிலாளர் வர்க்கத்தின் போர்க்குணமிக்க ஸ்தாபனமாக விளங்கிய "தேசிய தொழிற் சங்கம்" குறைந்த நேரத்துக்கான வேலை என்ற கோரிக்கையை முன்வைத்து அதற்காக பரந்த அளவில் ஒரு இயக்கத்தையே நடாத்தியது. இத்தகைய இயக்கபோக்கில் வளர்ந்து வந்த போராட்டங்கள் 1886 இல் உச்சநிலையை அடைந்தன. அமெரிக்க தொழிற்சங்கங்களும், தொழிலாளர் கட்சிகளும் போராட்டத்தில் ஒற்றுமையாக ஓரணிவகுத்து நின்றன. இத்தகைய காலத்தில் தான் தொழிலாளர்களின் உழைப்பை உறிஞ்சி வாழ்ந்த தொழிலதிபர்களும் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்திய அரசும் கிலி பிடித்துப் போயிருந்தன. இருப்பினும் பல்வேறு இடங்களிலும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வேலை நிறுத்தங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றிருந்த போதும் 1885இல் நடைபெற்ற தொழிலாளர் கூட்டமைப்பின் மாநாட்டு தீர்மானத்திற்கேற்ப 1886 மே முதல் தினமன்று பொது வேலைநிறுத்த அழைப்பை ஏற்று அனைத்து தொழிலாளர்களும் போராட்டத்தில் கலந்து கொண்டனர். (போராட்டத் தயாரிப்பு வேலைகளுக்கென 8 மணி நேர வேலைக்கான குழு அமைக்கப்பட்டிருந்தது)

தமிழத் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த வேலை நிறுத்தத்தின் மையநகரமாக விளங்கியது சிக்காக்கோ நகரமாகும். இங்குதான் வேலை நிறுத்த இயக்கம் சிறப்பாக இருந்தது. அதே நேரத்தில் மற்ற பல நகரங்களிலும் வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. சிக்காக்கோ நகரில் உணர்வலைகளை கலக்கமுயன்ற பொலிசுடன் ஏற்பட்ட மோதலில் பல தொழிலாளர்கள் தங்கள் உயிரை உரிமைக்காக துறந்தார்கள். இந்த வேலை நிறுத்தத்தின் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் திரட்டப்படாத மற்றும் பயிற்சி பெறாத தொழிலாளர்களும் இப்போராட்டத்திற்கு ஆதரவாக இருந்தமை தான். ஒரு புரட்சிகரமான உணர்வு நாடு முழுதும் நிலவியிருந்தது. முதலாளித்துவ சரித்திர ஆசிரியர்கள் கூட இப்போராட்டத்தை சிறுகப் போர் என்றும், மூலதனத்தின் மீதான வெறுப்பு என்றும், அப்போராட்டத்தின் போது கீழ்மட்ட ஊழியர்களிடையே நிலவியிருந்த அற்புதமான உற்சாகத்தையும் குறிப்பிடுகின்றார்கள். மே முதல் தினத்தில் பங்குகொண்ட தொழிலாளர்களில் பாதிப் பேர் வெற்றி கண்டதாக சொல்லப்படுகிறது. மற்ற இடங்களிலும் 8மணி நேரவேலைநாளை அடைய முடியாவிட்டாலும் குறைந்தளவே இந்த வேலை நேரத்தில் கணிசமான அளவு குறைக்கப்பட்டது.

அத்தகைய பெருமைக்குரிய, தொழிலாளர்களின் விடுதலைக்கான போராட்டத்துக்கு உத்வேகம் ஊட்டக்கூடிய மேதினம் இன்று அடைந்துள்ள நிலைமை மிகவும் கேலிக்குரியதும், கண்டனத்துக்குரியதாயும் உள்ளது. உலக நாடுகளில் மேதினம் என்பது சம்பிரதாய பூர்வமான ஒரு சடங்காகவே மாற்றப்பட்டுக் கொண்டு இருக்கிறது. எமது தேசத்திலும் இந்நிலையே, அதாவது இத்தினமானது பாசிச முதலாளித்துவ ஆட்சியாளர்களினதும், பாசிச வெறி இயக்கங்களினதும் பிரச்சார மேடையாகவே இப்போது பயன்படுகிறது. மக்கள் உரிமைகளை நசுக்குபவர்களும், மாற்றுக் கருத்துடையோரை கடத்துவதும், சித்திரவதை செய்வதும், படுகொலை செய்வதும், கொலை செய்து ஆற்றில் வீசுபவர்களும் இன்று இத்தினத்தை கொண்டாடுகிறார்கள்.

அன்பார்ந்த ஈ.ழ தேச மக்களே நாம் இன்றைய தினத்தினை எமது உரிமைக்கான எழுச்சிநாளாக இதனை அனுஷ்டிப்பதுடன் எமது எதிர்காலச் சந்ததியின் நல்வாழ்வுக்காக பழையனவற்றை அழித்தும், புதியவைகளை உருவாக்குகிறதில் உறுதி எடுப்போம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்